C.C.No. 212/2018

PW 1 சிவனாயி க/பெ. ராஜா

09.02.2026

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை

இவ்வழக்கின் சாட்சி அய்யங்காளை எனக்கு என்ன உறவு என்றால் எனது மருமகன். அசா2 எனக்கு என்ன உறவு என்றால் எனது மகள். பட்டியல் சாட்சிகள் சின்ராஜ், அருண்குமார், அர்சுணன், முத்துசெல்வம், சாவித்ரி எனக்கு என்ன உறவு என்றால் எனது உறவினர்கள்தான். ஆஜர் எதிரி கருப்பையா என்ன உறவு என்றால் மாமா முறை. எங்களுக்கும், வழக்கின் எதிரிகளுக்கும் இடையே என்ன பிரச்சனை இருந்து வருகிறது என்றால் இது நாள் வரை இடப்பிரச்சனை இருந்து வருகிறது. அந்த இடம் எங்கள் சுபாதனத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். எந்த வருடம் எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே சண்டை ஏற்பட்டது என்றால் 3, 4 வருடத்திற்கு முன்னாள் நடந்தது, தேதி, வருடம் தற்போது நினைவில் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் சரிதான். எந்த காவல் நிலைய போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் தெரியாது. புகார் மனு நான்தான் எழுதினேனா என்றால் எனக்கு எழுத, படிக்க தெரியாது என்பதனால் நான் சொல்ல, சொல்ல போலீசார் எழுதிக்கொண்டார்கள். நாங்கள் கொடுத்த வழக்கும், எதிரிகள் கொடுத்த வழக்கும் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது, அதுதொடர்பாக நீதிமன்றத்திற்கு வெளியே எங்களுக்குள் பேச்சுவார்த்தை நடத்தி சமரசமாக சென்றுவிட்டோமா என்றால் இல்லை, பேச்சு வார்த்தை மட்டும் நடந்துகொண்டிருக்கிறது.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.